20

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1875/29 - 2014 අගෝස්තු මස 14 වැනි බ්‍රහස්පතින්දා - 2014.08.14

*1875/29 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/78*

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.*

*செயலாளர்,*
*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.*

*2014, ஓகத்து 05.*

கட்டளைச் சட்டம்

1\. இக்கட்டளைச்சட்டம் 2014 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பட்டப்பின் ஆங்கில நிறுவக (திருத்தக்) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், 2014, ஓகத்து மாதம் 05 ஆந் திகதியன்று வலுவுக்கு வருதலும் வேண்டும்.

2\. 2005 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதிய 1417/12 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2005 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, பட்டப்பின் ஆங்கில நிறுவகக் கட்டளைச் சட்டம் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் 4 ஆம் பந்தியில் -

(i) அப்பந்தியின் (இ) என்னும் உட்பந்தியில் "ஆங்கிலத்தில்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "ஆங்கிலத்தில்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(ii) அப்பந்தியின் (உ) என்னும் உட்பந்தியில் "கல்விச் சிறப்புக்களையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கல்விச் சிறப்புக்களையும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(iii) அப்பந்தியின் (ஊ) என்னும் உட்பந்தியில் "நிறுவனங்களுடனும்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "நிறுவனங்களுடனும்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(iv) அப்பந்தியின் (ங) என்னும் பந்தியில் "பணிகளுக்கும்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "பணிகளுக்கும்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்.

(2) அதன் 6 ஆம் பந்தியில், அப்பந்தியின் (1) ஆம் உப்பந்தியில் ''பணிப்பாளர்'' என்னும் சொல்லுக்குப் பதிலாக ''பணிப்பாளர்'' என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(3) அதன் 7 ஆம் பந்தியில், ''பணிப்பாளர்'' என்னும் சொல்லிருந்து ''உறுப்பினரொருவராகவும் இருத்தல் வேண்டும்.'' என்னும் சொற்கள் வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக ''பணிப்பாளர், நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராகவும் மற்றும் பிரதான கல்விசார் அலுவலராகவும் இருத்தல் வேண்டும். அவர் நிறுவகத்தின் ஒவ்வொரு கற்கைச் சபையினதும் பதவிவழி உறுப்பினரொருவராகவும் இருத்தல் வேண்டும்.''.

(4) அதன் 8 ஆம் பந்தியில், அப்பந்தியின் (i) ஆம் உப்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

''(i) (இதனகத்துப்பின்னர் ''சபை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைச் சபை'' ;

(5) அதன் 9 ஆம் பந்தியில்-

(i) அப்பந்தியின் (1) ஆம் உப்பந்தியில் ''ஆறு பதவிவழி உறுப்பினர்கள், அதாவது-'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ii) அப்பந்தியின் (1) (இ) என்னும் உப்பந்தியில் ''ஆணைக்குழுவின்'' என்னும் சொல்லுக்குப் பதிலாக ''ஆணைக்குழுவின்'' என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(iii) அப்பந்தியின் (1) (உ) என்னும் உப்பந்தியில் ''பல்கலைக்கழகத்தின்'' என்னும் சொல்லுக்குப் பதிலாக ''பல்கலைக்கழகத்தில்'' என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(iv) அப்பந்தியின் (2) ஆம் உப்பந்தியில் ''வேறு எட்டு உறுப்பினர்கள்,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''வேறு பன்னிரெண்டு உறுப்பினர்கள்,'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(v) அப்பந்தியின் (2) (ஆ) என்னும் உப்பந்தியில் ''ஆங்கிலப் பேராசிரியர்கள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஆங்கிலப் பேராசிரியர்கள்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(vi) அப்பந்தியின் (2) (ஈ) என்னும் உப்பந்தியில் ''கற்கைச் சபைகளால்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''கற்கைச் சபைகளால்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(vii) அப்பந்தியின் (2) (ஊ) என்னும் உப்பந்தியில் ''நிறுவகத்தின்'' என்னும் சொல்லுக்குப் பதிலாக ''நிறுவகத்தின்'' என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(6) அதன் 10 ஆம் பந்தியில்-

(i) அதன் (1) ஆம் உப்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் உப்பந்தியை இடுவதன் மூலமும் :-

'' (1) பணிப்பாளரே சபையின் தவிசாளராக இருத்தல் வேண்டும் ; அவர் சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளர் வருகை தராதபோது, உறுப்பினர்கள், கூட்டத்துக்குத் தலைமைதாங்குவதற்கென உறுப்பினர்களிடையேயிருந்து வேறெவரேனும் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.'' ;

(ii) (அ) அப்பந்தியின் (2) ஆம் உப்பந்தியில் ''பெயர்குறித்து நியமிக்கப்பட்ட'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பெயர்குறித்து நியமிக்கப்பட்ட '' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பந்தியின் (2) ஆம் உப்பந்திக்கான காப்புவாசகத்தில் ''அடுத்துறுபவர்,'' மற்றும் ''முடிவுறாதெஞ்சியுள்ள'' என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே ''அடுத்துறுபவர்,'' மற்றும் ''முடிவுறாதெஞ்சியுள்ள'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(iii) அப்பந்தியின் (6) ஆம் உப்பந்திக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

''(6) வருகைதராமைக்கான அனுமதியின்றி, சபையின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகை தரத் தவறுகின்ற சபையின் எவரேனும் பதவிவழி உறுப்பினர், சபையின் உறுப்பினராகத் தமது பதவியை

19



வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், (3) ஆம், (4) ஆம், (5) ஆம் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட நியமிக்கும் அதிகாரி, 9 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அதன் விளைவான வெற்றிடத்தை நிரப்புவதற்குப் பொருத்தமான ஆளொருவரை நியமித்தலும் வேண்டும்." ;

(iv) அப்பந்தியின் (7) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(7) நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவிருக்கின்ற சபை உறுப்பினரொருவர் ஏதேனும் ஊதியத்திற்கு உரித்துடையவராதலாகாது. ஆனால், வேறு உறுப்பினர்களுக்கு பல்கலைக்கழகத்துடனான கலந்தாலோசனையுடன் நிறுவகத்தினால் தீர்மானிக்கப்பட்டதும், ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதுமான அத்தகைய ஊதியம் அல்லது படிகள் செலுத்தப்படுதல் வேண்டும். ";

(v) அப்பந்தியின் (8) ஆம் உட்பந்தியில் "மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலொன்றாதல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலொன்றாதல்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(vi) அப்பந்தியின் (9) ஆம் உட்பந்தியில் "ஆயின்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "ஆயின்," என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(vii) அப்பந்தியின் (10) ஆம் உட்பந்திக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(10) சபையின் தவிசாளரானவர், அவர் அவசியமெனக் கருதுகின்ற போதெல்லாம், சபையின் விசேட கூட்டத்தை நடத்தலாம்." ;

(7) அதன் 11 ஆம் பந்தியின் உட்பந்தி (1) இல் -

(i) அவ்வுப்பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியில் "ஒருப்பாட்டுடன்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "ஒருப்பாட்டுடன்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(ii) அவ்வுட்பந்தியின் (ஒ) என்னும் உட்பந்தியில் "ஆணைக்குழுவுக்குப் பல்கலைக்கழகத்துடனான கலந்தாலோசனையுடன்–" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பல்கலைக்கழகத்துக்கு–" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(iii) அவ்வுட்பந்தியின் (ஒ) என்னும் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(ஓ) நிறுவகத்தின் மாணவர்கள் மற்றும் ஊழியர்களை இடைநிறுத்துவதற்கு, விலக்குவதற்கு அல்லது அவர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கு அவசியமான நடவடிக்கையை எடுக்கும்படி பல்கலைக்கழகத்துக்கு விதந்துரைப்பதற்கும் ;" ;

(iv) அவ்வுட்பந்தியின் (ஞ) என்னும் உட்பந்தியில் "இக்கட்டளைச் சட்டத்தில் " என்னும் சொல்லுக்குப் பதிலாக "இக்கட்டளைச் சட்டத்தில்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(8) அதன் 12 ஆம் பந்தியில் -

(i) அப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் "கற்கைச் சபையொன்று அல்லது சபைகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கற்கைச் சபையொன்று அல்லது சபைகள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ii) அப்பந்தியின் (1) (உ) என்னும் உட்பந்தியில் "சபையால்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "இயைபான கற்கைச் சபையால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(iii) அப்பந்தியின் (2) ஆம் உட்பந்திக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(2) கற்கைச் சபை அல்லது சபைகள் சபையின் ஒருப்பாட்டுடன் ஓர் ஆளையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களையோ குறித்துரைக்கப்பட்டவோர் நோக்கத்திற்காகவும், குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கெனவும் கூட்டுச் சேர்க்கலாம், ஆனால் அவ்வாறு கூட்டுச் சேர்க்கப்பட்ட ஆளெவரும் சபையின் அல்லது கற்கைச் சபையின் ஏதேனும் கூட்டத்தில் தேர்தலுக்கு நிற்கவோ அல்லது அதில் வாக்களிப்பதற்கோ உரித்தைக் கொண்டிருத்தல் ஆகாது.";

(iv) அப்பந்தியின் (3) ஆம் உட்பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும் ;

(v) அப்பந்தியின் (5) ஆம் உட்பந்தியில் "உறுப்பினர்கள்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "உறுப்பினர்கள்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(vi) அப்பந்தியின் (5) (அ) என்னும் உட்பந்தியில் " கற்கைச் சபையின் அல்லது சபைகளின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கற்கைச் சபையின் அல்லது சபைகளின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(vii) அப்பந்தியின் (6) ஆம் உட்பந்தியில் "(உ) என்னும் உட்பந்தியின் கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(ஈ) என்னும் உட்பந்தியின் கீழ்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(viii) அப்பந்தியின் (7) ஆம் உட்பந்தியில் "கற்கைச் சபைக்கு அல்லது கற்கைச் சபைகளுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கற்கைச் சபைக்கு அல்லது கற்கைச் சபைகளுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ix) அப்பந்தியின் (8) ஆம் உட்பந்தியில் "மூன்றிலொன்றாதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "மூன்றிலொன்றாதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(9) அதன் 13 ஆம் பந்தியில் -

(i) அப்பந்தியின் (2) ஆம் உட்பந்தியில் "கல்விசார் குழுவானது," என்னும் சொற்களுக்குப் பதிலாக "கற்கைச் சபை அல்லது கற்கைச் சபைகள்," என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ii) அப்பந்தியின் (2) (இ) என்னும் உட்பந்தியில் "கல்விசார் குழுவின்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "கல்விசார் குழுவின்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(iii) அப்பந்தியின் (2) (உ) என்னும் உட்பந்தியில் "விளைவாந்தன்மையதான" என்னும் சொல்லுக்குப் பதிலாக "விளைவாந்தன்மையதான" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(10) அதன் 15 ஆம் பந்தியில் -

(i) அப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் "குறிப்பீடு செய்யப்படும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "குறிப்பீடு செய்யப்படும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ii) அப்பந்தியின் (2) ஆம் உட்பந்தியில் "வகுக்கப்பட்டு" என்னும் சொல்லுக்குப் பதிலாக "வகுக்கப்பட்டு" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(11) அதன் 16 ஆம் பந்தியில் -

(i) அப்பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியில் "கணக்குத் " என்னும் சொல்லுக்குப் பதிலாக "கணக்குத்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(ii) அப்பந்திக்கான காப்புவாசகத்தில் "நிறுவகத்தின்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "நிறுவகத்தின்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(12) அதன் 19 ஆம் பந்தியில், அப்பந்தியின் (2) ஆம் உட்பந்தியில் "நிறுவகத்தின்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "நிறுவகத்தின்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(13) அதன் 21 ஆம் பந்தியில் "பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு" என்னும் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :-

"ஆணைக்குழு" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எனப் பொருள்படும்.

8- 979

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.